## நெருக்கடியான தருணங்களில் உடன் இருந்த

# தி.மு.க.வை முதுகில் குத்திய காங்கிரஸ்!

## பிரதமர் மோடி கடும் தாக்கு!

**பெங்களூரு, மே 12 - துரோகம் இழைக்க மட்டுமே காங்கிரஸ் கட்சிக்குத் தெரியும் என்றும், தனது நீண்டகால கூட்டணி கட்சியான திமுகவுக்கே துரோகம் இழைத்த கட்சி அது என்றும் பிரதமர் நரேந்திர மோடி சாடியுள்ளார்.**

வாழும் கலை அமைப்பின் 45வது ஆண்டு விழாக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதற்காக கர்நாடகா வந்த பிரதமர் நரேந்திர மோடி, அங்கு கூடி இருந்த பாஜக தொண்டர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றினார்.

அப்போது அவர், "போலி வாக்குறுதிகள் காரணமாக காங்கிரஸ் கட்சி மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது. தற்போது அது, பிராந்திய கட்சிகளின் துணையுடன் பிழைத்து வாழும் ஒரு ஒட்டுண்ணி அரசியல் சக்தியாக உள்ளது.

எந்த ஒரு மாநிலத்திலும் காங்கிரஸ் அரசு இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்ததில்லை. ஆட்சி அமைத்த சில மாதங்களிலேயே காங்கிரஸ் கட்சிக்கு எதிராக மக்கள் மத்தியில் அதிருப்தி எழத் தொடங்கி விடுகிறது.



**காங்கிரசை மீட்டெடுத்த தி.மு.க.!**

இதற்குக் காரணம், துரோகம் இழைக்க மட்டுமே காங்கிரஸ் கட்சிக்குத் தெரியும். அவர்கள் பொய்யர்கள்; அவர்களின் வாக்குறுதிகளும் போலியானவை. காங்கிரஸ் கட்சியின் அதிகாரப் புத்தகத்தில் நிர்வாகம் என்ற அத்தியாயம் அறவே இல்லை.

தமிழ்நாட்டில் கடந்த பல ஆண்டுகளாக காங்கிரஸ் கட்சிக்கும் தி.மு.க.வுக்கும் இடையே மிக நெருக்கமான உறவு இருந்து வருகிறது. தி.மு.க.வுடனான இந்த கூட்டணிதான் நெருக்கடியான தருணங்கள் பலவற்றில் இருந்த காங்கிரஸ் கட்சியை மீண்டும் மீண்டும் மீட்டெடுத்திருக்கிறது. 2014ம் ஆண்டுக்கு முன் அவர்கள் 10 ஆண்டுகள் நடத்திய ஆட்சி, தி.மு.க.வின் துணையால் மட்டுமே நிலைத்திருந்தது.

பல ஆண்டுகளாக தங்களோடு மிக நெருக்கமான பிணைப்பைக் கொண்டிருந்த தி.மு.க.வை; காங்கிரஸ் கட்சியின் நலனுக்காக ஒவ்வொரு கணமும் உழைத்த அந்த தி.மு.க.வை; அதிகார ஆட்டம் வேறு திசைக்கு திரும்பிய உடனேயே அதிகார வெறிபிடித்த காங்கிரஸ் கட்சி தனது பதவி ஆசை காரணமாக கிடைத்த முதல் வாய்ப்பிலேயே தி.மு.க.வின் முதுகில் குத்திவிட்டது.

நீண்டகாலக் கூட்டணி கட்சியான தி.மு.க.வுக்கு துரோகம் இழைத்துள்ளது. அரசியல் சூழல்கள் மாறும்போதெல்லாம் அக்கட்சி தனது சொந்த கூட்டணி கட்சிகளுக்கே எதிராக திரும்பி விடுகிறது. ஒட்டுண்ணி போன்ற காங்கிரஸ் கட்சிக்கு இப்போது தனது இருப்பை தக்கவைத்துக் கொள்ள, தான் சவாரி செய்ய மற்றொரு கட்சியின் துணை தேவைப்படுகிறது.

ஒரு காலத்தில் 400க்கும் மேற்பட்ட மக்களவைத் தொகுதிகளில் வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சி இப்போது, கூட்டணிகளை அமைத்த பிறகும் கூட 100 தொகுதிகள் என்ற இலக்கை கடக்க முடியாமல் திணறுகிறது என்று பிரதமர் மோடி கூறினார்.

## விஜய் பதவியேற்பு விழாவில் நடந்த வினோதங்கள்!

**1)பதவி ஏற்பு உறுதி மொழியை ஏதோ சினிமா பாணியில் குரலையும் இரண்டு கைகளையும், உயர்த்தி விஜய் பதவி ஏற்றது.**

**2)பதவியேற்பு முடிந்தவுடன், ஆளுநருடன் முதல்வர் உள்ளிட்ட அமைச்சரவைக் குழு புகைப்படம் (Group Photograph) எடுக்கப்பட்ட போது, அமைச்சரவைக்குத் தொடர்பில்லாத அமைச்சராக இல்லாத ராகுல் காந்தியையும் அமர்ந்து கொள்ள அனுமதித்தது.**

**3)பதவியேற்பு முடிந்து, அரசின் அதே மேடையை, த.வெ.க. தலைவர் விஜய், கட்சி அரசியல் மேடையாகப் பயன்படுத்தி, சினிமா பாணியில் வசனம் பேசியது.**

**4)வழக்கமாக முதலில் பாடப்படும் தமிழ்த்தாய் வாழ்த்தை மூன்றாம் இடத்திற்கு தள்ளியது!**

## த.வெ.க.வுக்கு ஆதரவு தெரிவித்திருந்தாலும்

# தி.மு.க. கூட்டணியிலேயே தொடருகிறோம்!

## பேராசிரியர் காதர் மொகிதீன் தகவல்!

*சென்னை, மே 12 -*

*இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் காதர் மொகிதீன், திமுக கூட்டணியிலேயே தொடர்வதாக அறிவித்துள்ளார்.*

*இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் காதர் மொகிதீன் வெளியிட்ட அறிக்கையில், தமிழ்நாட்டில் ஆளுநர் ஆட்சி என்பது வரவேற்புக்கு உரியது அல்ல என்பதையும் ஜனநாயக அரசு உருவாக்குவதை தவிர்த்தால் மக்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டு விடும் என்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உயர்மட்டக் குழு கருதுவதாக கூறி யுள்ளார். தமிழகத்தின் பாரம்பரியத்தை பேணிக் காப்பதற்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் த.வெ.கா.வுக்கு ஆதரவு என்ற முடிவு எடுத்துள்ளதாக குறிப்பி ட்டுள்ளார்.*



*தமிழக அரசியலில் நீண்ட காலமாக தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் இருந்து வரும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் அதே நிலையில் தொடரும் என்றும் தமிழகத்தில் ஜனநாயக முறையிலான ஆட்சி உருவாவதற்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில உயர்மட்டக்குழு தீர்மானத்தை நிறைவேற்றி இருப்பதாக மொகிதீன் தெரிவித்துள்ளார்.*

# தி.மு.க. கூட்டணியில்தான் நாங்கள் இருக்கிறோம்!

## தொல்.திருமாவளவன் எம்.பி. பேட்டி!

*சென்னை, மே 12 -*

*த.வெ.கவிற்கு ஆதரவு அளித்தாலும் தி.மு.க கூட்டணியில்தான் விடுதலை சிறுத்தைகள் கட்சி நீடிப்பதாக அக்கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்துள்ளார்.*

*சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன், தமிழ்நாட்டில் மீண்டும் ஒரு தேர்தல் வரக்கூடாது என்பதற்காகவும், குடியரசு தலைவர் ஆட்சியை அமல்படுத்துவதை தடுக்கவுமே த.வெ.க.விற்கு ஆதரவு அளித்துள்ளதாக தெரிவித்தார்.*



*விடுதலை சிறுத்தைகள் கட்சி தி.மு.க கூட்டணியில்தான் தொடர்ந்து நீடிக்கிறது என்றும் அவர் கூறினார்.*

## 'ஆக்க ரீதியான எதிர்க்கட்சியாகப் பொறுப்புடன் செயல்படுவோம்'' என்று

# அரசியல் முதிர்ச்சியுடன் அறிவித்த தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு பாராட்டு!


## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

*சென்னை, மே 12 -*

*முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள ஜோசப் விஜய்க்கு வாழ்த்துகள்! "ஆக்க ரீதியான எதிர்க்கட்சியாகப் பொறுப்புடன் செயல்படுவோம்'' என்று அரசியல் முதிர்ச்சியுடன் அறிவித்த தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், நிலைமையை யொட்டி சரியான முடிவை எடுத்த கட்சிகளுக்கும் பாராட்டு! தமிழ்நாட்டைக் காவிமயமாக்கும் முயற்சி தடுப்பு! சுயமரியாதை, சமூகநீதி மண்ணாகவே தமிழ்நாடு தொடரட்டும்! என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார். அவரது அறிக்கை வருமாறு:*

*(9.5.2026) அன்று மாலை தமிழ்நாட்டின் பொறுப்பு ஆளுநர் அர்லேகர் அவர்களின் தேவையற்ற, நீண்ட அலைக்கழிப்புக்குப் பின்னர் - தேர்தலில் போட்டியிட்டு அதிக இடங்களை வென்று (107) தனிப் பெரும் கட்சியாகியுள்ள தமிழக வெற்றிக் கழகம் மற்றும் அக்கட்சி ஆட்சி அமைக்க ஆதரவு தெரிவித்துள்ள பிற கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்பட, ஆளுநர் கேட்ட 118 சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு பெற்றுள்ள, தமிழக வெற்றிக் கழகத் தலைவர் ஜோசப் விஜய் அவர்களை ஆட்சி அமைக்க அழைத்து, முதலமைச்சராக நியமனம் செய்து ஆணை பிறப்பித்தார்.*

*நேற்று முன்தினம் (10.5.2026) காலை முதல்வராகப் பதவியேற்ற ஜோசப் விஜய் அவர்களுக்குத் திராவிடர் கழகத்தின் சார்பில் நமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*



**தி.மு.க. கூட்டணிக் கட்சிகளின் முடிவுக்குப் பாராட்டு!**

*''மக்கள் தீர்ப்பைத் தலைவணங்கி ஏற்று, ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாகப் பொறுப்புடன் செயல்படுவோம்'' என்று மிகத் தெளிவான பார்வையுடனும், நேர்மையோடும் கூறியுள்ள தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் -*

*"அவர் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கொள்கையிலிருந்து அணி மாறவில்லை; கொள்கைக் கூட்டணியாக தி.மு.க.வுடன் தொடருவோம்'' என்று அறிவித்து கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளான இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், விடுதலைச் சிறுத்தைகள் ஆகிய கட்சிகளுக்கும் நமது பாராட்டுகள்!*

*தி.மு.க.வின் கொள்கைக் கூட்டணியில் தொடர்ந்து நீடிக்கும் ம.தி.மு.க., தே.மு.தி.க., ம.ம.க., ம.ஜ.க., கொ.ம.தே.க. உள்ளிட்ட மற்ற கட்சிகளுக்கும் நமது பாராட்டுகள்!*

**காவி மயம் முறியடிக்கப்பட்டது!**

*இந்தச் செறிவான முடிவினால், தமிழ்நாட்டினைக் காவி மயமாக்கும் திட்டம் முறியடிக்கப்பட்டுள்ளது.*

*மதவாதச் சக்திகளுக்கு நேரிடையாகவோ, மறைமுகமாகவோ இடந்தராமல், தமிழ்நாடு சமூகநீதி, சுயமரியாதை, சமதர்ம மண்ணாகவே என்றும் இருக்கும் என்று பிரகடனப்படுத்தப்பட்டு இருப்பது மிகவும் மகிழ்ச்சி யளிக்கின்றது.*

*இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

## புதிய முதலமைச்சரை தேர்வு செய்யும் விவகாரம்!

# கேரளாவில் காங்கிரஸ் கட்சி தலைமைக்கு எதிராக போராட்டம் தீவிரம்!

## சதீஷனை முதலமைச்சராக்க வலியுறுத்தி ஆதரவாளர்கள் போர்க்கொடி!

*திருவனந்தபுரம், மே 12 -*

*கேரளாவில் புதிய முதலமைச்சரை தேர்வு செய்யும் விவகாரத்தில் காங்கிரஸ் கட்சி தலைமைக்கு எதிராக அக்கட்சி தொண்டர்கள் இரண்டாவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.*

*கேரள சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்றது.*

*இருப்பினும், அக்கட்சியில் இதுவரை முதல்வர் யார் என்பதை தீர்மானிக்க முடியாத நிலை நீடிக்கிறது.*

*முதல்வர் பதவிக்கு கே.சி.வேணுகோபால், சதீசன் மற்றும் ரமேஷ் சென்னித்தலாவுக்கு இடையே கடும் போட்டி நிலவி வருகிறது. இந்நிலையில், டெல்லியில் கட்சி தலைமை நீண்ட நேரம் ஆலோசனை நடத்தியும் இறுதி முடிவு எட்டப்படவில்லை.*

*இதற்கிடையே வேணுகோபால், சதீசன் மற்றும் ரமேஷ் சென்னிதாலாவின் ஆதரவாளர்கள் தங்களது தலைவர்களுக்கு ஆதரவு தெரிவித்து பல்வேறு பகுதிகளில் பேரணி நடத்தினர்.*

*இதனை கட்சி தலைமை கடுமையாக கண்டித்துள்ளது. ஆனால் அதையும் மீறி பல இடங்களில் சதீசனின் ஆதரவாளர்கள் பேரணி நடத்தினர்.*

*சதீசனை முதலமைச்சராக்க வேண்டும் என வலியுறுத்தி போராட்டங்களிலும் ஈடுபட்டனர். இதனால் காங்கிரஸ் தலைமையை கண்டித்து இரண்டாவது நாளாக அக்கட்சி தொண்டர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.*

*இதனால், முதலமைச்சர் பதவியை கைப்பற்றுவதில் காங்கிரஸ் கட்சிக்குள் உச்சகட்ட கோஷ்டி மோதல் ஏற்பட்டுள்ளது.*

*இதனிடையே, கேரள முதலமைச்சர் பதவியைக் கைப்பற்றும் நோக்கில் வி.டி.சதீசன், ரமேஷ் சென்னித்தலா, வேணுகோபால் ஆகிய 3 பேரும் டெல்லியில் முகாமிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.*

## அடுக்குமாடி குடியிருப்புகளில்

# குழாய் வழியாக எரிவாயு பயன்பாடு அதிகரிக்க திட்டம்!

## எரிவாயு ஒழுங்குமுறை வாரியம் தகவல்!

*சென்னை, மே 12 -*

*அடுக்கு மாடி குடியிருப்பு பகுதிகளில் குழாய் வழி இயற்கை எரிவாயு பயன்பாட்டை அதிகரிக்க திட்டம் மேற் கொள்ளப்பட்டு உள்ளதாக பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்கு முறை வாரியம் தெரிவித்துள்ளது.*

*குழாய் வழி இயற்கை எரிவாயு பயன்பாட்டை அதிகரிக்கும் நோக்கத்தில் ஓ.எம்.ஆர்.சாலையில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு உடனடி காஸ் இணைப்பு வழங்கும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் நடந்தது.*

*ஒன்றிய அரசின் பெட்ரோ லியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியத்துடன் இணைந்து செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் பகுதிகளில் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி குடியிருப்புகளில் குழாய் வழி எரிவாயு இணைப்பு வழங்கி, அந்த குடியிருப்பை எல்.பி.ஜி. இல்லா குடியிருப்பு என சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது.*

*அதன் ஒரு பகுதியாக ஓ.எம்.ஆர். சாலையில் உள்ள ஸ்டேட் வங்கி அலுவலர் குடியிருப்பு, விக்டோரியா டவர், எம்பஸி ரெசி டென்சி, பொல்லினேனி பேஸ் 1,2,3 மற்றும் அர்பன் ரைஸ் ரெவல்யூஷன் ஆகிய குடியிருப்புகளில் அடங்கிய வீடுகளில் வசிப்பவர்களுக்கு 100 சதவீதம் இந்த குழாய் வழி இயற்கை எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டது. இதற்கான எல்.பி.ஜி. ப்ரீ ஸோன் எனப்படும் எல்.பி.ஜி. இல்லா பகுதி என்ற சான்றிதழும் வழங்கப்பட்டது.*

*நிகழ்ச்சியில் கலந்து கொண்ட திங்க் காஸ் நிறுவனத்தின் காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மண்டல தலைவர் திருக்குமரன் கூறுகையில், 'இந்தஎல்.பி.ஜி ப்ரீ ஸோன் அறிவிப்பின் மூலம், குடியிருப்புகளுக்கான குழாய் வழி இயற்கை எரிவாயு பயன்பாட்டை விரைவுபடுத்தவும், குழாய் எரிவாயு வசதி பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கவும் நாங்கள் முயற்சிக்கிறோம். இந்த குடியிருப்புகளில் மக்களிடம் இருந்து கிடைக் கும் வரவேற்பு எங்களுக்கு ஊக்கமளிக்கிறது.*

*மேலும்பலகுடும்பங்கள் எவ்வித சிரமமுமின்றி குழாய் வழி இயற்கை எரிவாயு பயன் பாட்டிற்கு மாறுவதற்கு முழு ஆதரவளிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்றார்.*

## ரயில்வேயில் காத்திருப்புப் பட்டியல் பிரச்சினை:

# கடந்தாண்டில் 3 கோடிக்கும் மேற்பட்டோரின் டிக்கெட் ரத்து!

புதுடெல்லி, மே 12–

ரயில் பயணத்துக்காகக் காத்திருப்பு பட்டியலில் இருந்து பயணம் செய்ய முடியாதவர்களின் எண்ணிக்கை 3.39 கோடியை எட்டியுள்ளது.

ரயிலில் பயணம் செய்ய முடியாமல், கடந்தாண்டில் டிக்கெட் ரத்து செய்யப்பட்ட பயணிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்ற விவரத்தை தகவல் அறியும் உரிமை சட்டம் மூலம் சந்திர சேகர் கவுர் என்பவர் கேட்டுள்ளார்.

இதற்கு ரயில்வே அளித்த பதிலில் கடந்த 2025–26ம் நிதியாண்டில் 3.39 கோடி பயணிகள் காத்திருப்பு பட்டியலில் இருந்து இடம் கிடைக்காததால் அவர்களின் டிக்கெட் ரத்து செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. கடந்த 2021–22ம் ஆண்டில் டிக்கெட் உறுதி செய்யப்படாமல் ரத்து செய்யப்படும் பயணிகளின் எண்ணிக்கை 1.65 கோடியாக இருந்தது.

2022–23ம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 2.72 கோடியாக உயர்ந்தது. 2023–24ம் ஆண்டில் இது 2.96 கோடியாக உயர்ந்தது. கடந்த நிதியாண்டில் இது 3.39 கோடியை எட்டியுள்ளது. டிக்கெட் ரத்தாவதன்மூலம் பண இழப்பு உள்ளிட்ட அதிக பாதிப்புகளை சந்திப்பது படுக்கை வசதி மற்றும் 3ம் வகுப்பு ஏசி வகுப்பில் முன்பதிவு செய்யும் பயணிகள் என்பதும் தெரியவந்துள்ளது.

ஒவ்வொரு நாளும் 92,877 பயணிகள், ஒவ்வொரு மணி நேரமும் 3,870 பயணிகள், ஒவ்வொரு நிமிடமும் 64 பயணிகள், ஒவ்வொரு விநாடியும் ஒன்றுக்கும் மேற்பட்ட பயணிகள் தங்கள் டிக்கெட் உறுதி செய்யப்படும் வாய்ப்பை இழக்கின்றனர்.